©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 20] சென்னை, புதன்கிழமை, மே 26, 2010
வைகாசி 12, திருவள்ளுவர் ஆண்டு – 2041

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (3D) எண் 13, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, 15 ஜூலை 2009.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை, புதுடில்லி, 9 மார்ச் 2009.**

**எஸ்.ஒ. 649(E).**–1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறவேண்டிய அவசியம், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்கு பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது.

**1.** (1) இவ்வாணை, 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப்பொருட்கள் குறித்த உரிமம் வழங்குதல், இருப்பு வரையறை, கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல் ஆணை என்று பெயர் பெறும்.

(2) இது அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறவேண்டிய அவசியம், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில், விற்பனைக்காக கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல், வழங்கல் அல்லது விற்பனைக்காக இருப்பு வைத்தல் ஆகியவை தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சொற்கள் மற்றும் தொடர்கள், சர்க்கரைக்காக இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து அல்லது மேற்கொண்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து இவற்றில் எது முந்தையதோ அந்நாளிலிருந்து நான்கு மாத கால அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

**3.** இந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட எதுவும் மாநிலத்திற்கு வெளியே உள்ள இடங்களுக்கு சர்க்கரையை எடுத்துச் செல்வதை, விநியோகிப்பதை அல்லது விற்பனை செய்வதை பாதிக்காது அல்லது இப்பொருளை இறக்குமதி செய்வதற்கு இது பொருந்தாது.

ஆனால், மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் இறக்குமதியாளர்கள் பெற்றுள்ள சர்க்கரை இருப்பு மற்றும் வைத்திருந்த இருப்புகளை அறிவிக்குமாறு அவர்களுக்கு உத்தரவிடலாம்.

2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறவேண்டிய அவசியம், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையின் ஏனைய அனைத்து விதித்துறைகளும், மேலே 2 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு தொடர்ந்து செயலில் இருக்கும்.

**ராகேஷ் கக்கர்,**
*மத்திய அரசு கூடுதல் செயலாளர்.*

**கே. சண்முகம்,**
*அரசுச் செயலாளர்.*

**இந்திய அரசு நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (உணவு மற்றும் பொது விநியோகத் துறை), ஆணை, புதுடில்லி, 12 மார்ச் 2009.**

**ஜி.எஸ்.ஆர். 164(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் 5ஆம் பகுதியின்படியும், மத்திய அரசு, அங்கீகரிக்கப்பட்ட சர்க்கரை வணிகர், காற்றொழி தட்டுமுறையில் தயாரிக்கப்பட்ட சர்க்கரை இருப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்கு மேற்பட்டு அத்தகைய இருப்பு ஏதும் வைத்திருக்கக் கூடாது என்றும், கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில், அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்ட அளவுக்கு மிகையாக, எந்தவொரு சமயத்திலும் மேற்சொன்ன சர்க்கரை இருப்பை வைத்திருக்கக்கூடாது என்றும் இதனால் உத்தரவிடுகிறது.

(i) கொல்கொத்தா மற்றும் நீட்டிக்கப்பட்ட பகுதி:—

(a) மேற்கு வங்காளத்திற்கு வெளியிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் - 10,000 குவிண்டால்கள்

(b) ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள்— 2000 குவிண்டால்கள்

(ii) ஏனைய பகுதிகளில் — 2000 குவிண்டால்கள்

ஆனால், இந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட எதுவும் பின்வருவனவற்றை பொறுத்தமட்டில் சர்க்கரை இருப்பை வைத்திருப்பதற்கு அல்லது பேணுவதற்குப் பொருந்தாது.

(i) அரசுக் கணக்கு; அல்லது

(ii) நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகம் செய்வதற்காக இருப்பு வைப்பதற்கு மாநில அரசால் நியமிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது

(iii) இந்திய உணவுக் கழகம்

மேலும், மேற்சொன்ன இருப்பு வைத்திருக்கும் வரையறை அல்லது இருப்புகளின் விற்று முதல் கால அளவு தாராள பொது உரிமத்தின்கீழ் வரும் சர்க்கரை இறக்குமதியாளர்களுக்குப் பொருந்தாது.

மேலும், மேற்சொன்ன ஆணையின் 15 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்தந்த மாநில அரசுகளின் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருப்பு வைப்பு மற்றும் விற்று முதல் வரையறைகளை நிர்ணயிப்பதற்கு, அந்தந்த மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதி நிருவாகத்திற்கு அதிகாரமளிக்கிறது.

(i) இருப்பு வைக்கும் வரையறை மற்றும்/அல்லது விற்றுமுதல் கால அளவானது, மத்திய அரசு மேலே குறிப்பிடப்பட்ட வரையறைக்கு அல்லது கால அளவுக்குக் குறைவாக இருக்கக்கூடாது.

(ii) சில்லறை வணிகத்தில் ஈடுபட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட வணிகரின் இருப்பு வைத்திருக்கும் அளவு, மொத்த விற்பனையாளருக்காக குறிப்பிடப்பட்ட அளவைக்காட்டிலும் குறைந்தளவில் இருக்கவேண்டும்.

**விளக்கங்கள்.**—இந்த அறிவிக்கையின் செயல் நோக்கத்திற்காக,

(i) ''கொல்கொத்தா மற்றும் நீட்டிக்கப்பட்ட பகுதி'' என்பது, மேற்குவங்க அரசின் **16–12–1964** ஆம் நாளிட்ட **7752**/எஃப்.எஸ்/ எஃப். **5/14** ஆர் **92/61** ஆம் எண் அறிவிக்கையின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதி என்று பொருள்படும்.

(ii) இருப்பு வைத்திருக்கும் கால அளவை கணக்கிடுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட வணிகர் யாதொரு இருப்பை பெற்ற நாள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**2.** இந்த ஆணை அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து **15** நாட்களுக்குப் பின்னர் செயலுக்கு வருவதுடன், அதன் பின்னர் நான்கு மாத கால அளவுக்கு செயலில் இருக்கும்.

**என். சான்யேல்,**
*மத்திய அரசின் இணைச் செயலாளர்.*

**கே. சண்முகம்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (பொ),*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (3D) எண் 17, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, 24 ஆகஸ்ட் 2009.]*

**இந்திய அரசு நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (உணவு மற்றும் பொது விநியோகத் துறை), ஆணை, புதுடில்லி, 16 மார்ச் 2009.**

**ஜி.எஸ்.ஆர் 531(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, **1966** ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாட்டு) ஆணையின் **5** ஆம் பகுதியின்படியும், மத்திய அரசு, அங்கீகரிக்கப்பட்ட சர்க்கரை வணிகர், காற்றொழி தட்டுமுறையில் தயாரிக்கப்பட்ட சர்க்கரை அல்லது கந்தசாரி ('ஓபன் பான் சுகர்') முறையில் தயாரிக்கப்பட்ட சர்க்கரை இருப்பை பெற்ற நாளிலிருந்து **30** நாட்களுக்கு மேற்பட்டு அத்தகைய இருப்பு ஏதும் வைத்திருக்கக் கூடாது என்றும், கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில், அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்ட அளவுக்கு மிகையாக, எந்தவொரு சமயத்திலும் காற்றொழி தட்டுமுறையில் தயாரிக்கப்பட்ட சர்க்கரை இருப்பை வைத்திருக்கக்கூடாது என்றும் இதனால் உத்தரவிடுகிறது.

**(1)** (i) கொல்கொத்தா மற்றும் நீட்டிக்கப்பட்ட பகுதியில்.................

(a) மேற்கு வங்காளத்திற்கு வெளியிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் - **10,000** குவிண்டால்கள்

(b) ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள்—**2000** குவிண்டால்கள்

(ii) ஏனைய பகுதிகளில்—**2000** குவிண்டால்கள்

**(2)** கந்தசாரி (ஓபன் பான் சுகர்)......................**2000** குவிண்டால்கள்;

ஆனால், இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்ட எதுவும் பின்வருவனவற்றை பொறுத்தமட்டில் சர்க்கரை இருப்பை வைத்திருப்பதற்கு அல்லது பேணுவதற்குப் பொருந்தாது.

(i) அரசுக் கணக்கு அல்லது

(ii) நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகம் செய்வதற்காக இருப்பு வைப்பதற்கு மாநில அரசால் அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அல்லது

(iii) இந்திய உணவுக் கழகம்

மேலும், மேற்சொன்ன இருப்பு வைத்திருக்கும் வரையறை அல்லது இருப்புகளின் விற்று முதல் காலஅளவு, தாராள பொது உரிமத்தின்கீழ் வரும் சர்க்கரை இறக்குமதியாளர்களுக்கு பொருந்தாது.

மேலும், மேற்சொன்ன ஆணையின் 15 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்தந்த மாநில அரசுகளில் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருப்பு வைப்பு மற்றும் விற்று முதல் வரையைறைகளை நிர்ணயிப்பதற்கு, அந்தந்த மாநில அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதி நிருவாகத்திற்கு அதிகாரமளிக்கிறது.

(i) இருப்பு வைக்கும் வரையறை மற்றும்/அல்லது விற்றுமுதல் கால அளவானது, மத்திய அரசு மேலே குறிப்பிடப்பட்ட வரையறைக்கு அல்லது காலஅளவுக்கு குறைவாக இருக்கக்கூடாது; மற்றும்

(ii) சில்லறை வணிகத்தில் ஈடுபட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட வணிகர் இருப்பு வைத்திருக்கும் அளவு, மொத்த விற்பனையாளருக்காக குறிப்பிடப்பட்ட அளவைக்காட்டிலும் குறைந்தளவில் இருக்க வேண்டும்.

**விளக்கம்.**—இந்த அறிவிக்கையின் செயல் நோக்கத்திற்காக,

(i) "கொல்கொத்தா மற்றும் நீட்டிக்கப்பட்ட பகுதி" என்பது, மேற்குவங்க அரசின் 16–12–1964 ஆம் நாளிட்ட 7752 எஃப்.எஸ்/எஃப்.5/14 ஆர் 92/61 ஆம் எண் அறிவிக்கையின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதி என்று பொருள்படும்.

(ii) இருப்பு வைத்திருக்கும் கால அளவை கணக்கிடுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட வணிகர் யாதொரு இருப்பை பெற்ற நாள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(iii) சர்க்கரை மொத்த வணிகர் அல்லது சில்லறை வணிகர் ஒருவர், சர்க்கரை இறக்குமதியாளர்கள் அல்லது சர்க்கரை இறக்குமதியாளர் ஒருவரிடமிருந்து, இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அல்லது சுத்தகரிக்கப்பட்ட சர்க்கரையை நேரடியாக வாங்குகின்றபோது அல்லது கொள்முதல் செய்கின்றபோது, அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரை இருப்புகளை பொறுத்தவரையில், மேற்சொன்ன மொத்த வணிகர் அல்லது சில்லறை வணிகர், இருப்பு வைப்பதற்கான வரையறைக்கு உட்படமாட்டார்; ஆனால், 30 நாட்கள் என்ற விற்றுமுதல் கால அளவு அவருக்கு பொருந்தத்தக்கதாகும். அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரை இருப்புகளின் இரண்டாம் மற்றும் அதனையடுத்த விற்பனைக்கு சர்க்கரை மொத்த வணிகர் அல்லது சில்லரை வணிகருக்கு இதில் கண்டுள்ள விலக்கு கிடைக்காது.

(iv) இறக்குமதி செய்யப்பட்ட கச்சா சர்க்கரையிலிருந்து செயல்முறைப்படுத்தப்பட்ட வெள்ளை அல்லது சுத்தகரிக்கப்பட்ட சர்க்கரையை, சர்க்கரை மொத்த வணிகர் அல்லது சில்லறை வணிகர் வாங்குகின்றபோது, அல்லது கொள்முதல் செய்கின்றபோது, மேற்சொன்ன சர்க்கரை மொத்த வணிகர் அல்லது சில்லறை வணிகர், இருப்பு வைப்பதற்கான வரையறை மற்றும் விற்றுமுதல் காலஅளவிற்கு உட்பட்டவராகிறார் என்று ஐயம் நீக்கும் பொருட்டு தெளிவுபடுத்தப்படுகிறது.

2. இந்த ஆணை, சர்க்கரை (காற்றொழி தட்டு முறை) மற்றும் கந்தசாரி ('ஓபன் பான் சுகர்') பொறுத்தவரையில், **அரசிதழில்** வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குப் பின்னர் உடனடியாக செயலுக்கு வருவதுடன், அதன் பின்னர் ஆறு மாதகால அளவுக்கு செயலில் இருக்கும்.

**என். சான்யேல்,**
*மத்திய அரசின் இணைச் செயலாளர்.*

**கே. சண்முகம்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (பொ),*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.